IITA

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு – 2019

பாடம்: நடனம் (பரதம்) தரம்: நான்கு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்:......................

**பகுதி I இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**

**பகுதி II இல் முதலாவது வினாவிற்கும், ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. தஞ்சை நால்வரின் தகப்பனார்

   அ. சிதம்பரம் ஆ. சபாபதி

   இ. சுப்பராயன் ஈ. இராமலிங்கம்

2. உத்ப்ளவனம் எனப்படுவது

   அ. நடத்தல் ஆ. பாய்தல்

   இ. சுற்றுதல் ஈ. ஓடுதல்

3. பாத்திர அந்தப் பிராணன்களுள் அடங்குவது

   அ. விரைவு, உறுதி, வடிவம் ஆ. சுருதி, கிண்கிணி, கீதம்

   இ. இடை, பக்கம், பாதம் ஈ. தாளம், குழல், வீணை

4. பாந்தவ்ய ஹஸ்தங்கள் எனப்படுவது

   அ. தேவர்களுக்குரிய கைகள் ஆ. உறவு முறைக்கைகள்

   இ. அவதாரங்களுக்குரிய கைகள் ஈ. கோள்களுக்கான கைகள்

5. முதலாவது மண்டியடவினை ஒருதரம் செய்தல்

   அ. ஆலிடம் ஆ. காருடம்

   இ. சமஸூசி ஈ. மோடிதம்

6. ஆடை, ஆபரணங்களால் கருத்தை வெளிப்படுத்துவது

   அ. வாசிக அபிநயம் ஆ. ஆங்கிக அபிநயம்

   இ. சாத்விக அபிநயம் ஈ. ஆஹார்ய அபிநயம்

7. இரு கைகளிலும் ஒரே ஹஸ்தம் கொண்டு பிரயோகிக்கப்படும் பாந்தவ்ய ஹஸ்தம்

அ. மாமன் ஆ. அண்ணன் தம்பி

இ. தாய் ஈ. மைத்துனன்

8. சபைக்குத் தலைவனாக விளங்கக்கூடியவரின் இயல்புகளில் ஒன்று

அ. வேறுவிடயங்களில் கவனம் செலுத்துபவர் ஆ. கலையறிவு உடையவர்

இ. பேச்சுத் திறமையுடையவர் ஈ. ஆ, இ சரியானவை

9. விழி, கபோலம், பல், உதடு போன்றவைகள் அடங்குவது

அ. உபாங்கம் ஆ. அங்கம்

இ. பிரத்தியாங்கம் ஈ. மேற்கூறிய யாவும் பிழை

10. மண்டல பேதத்தின் பிரிவினுள் ஒன்று

அ. ஏகபாதம் ஆ. க்ருபாலகம்

இ. ஸ்வஸ்திகம் ஈ. லுடிதம்

11. நாட்டியப் பெண்ணின் திறமையை வெளிப்படுத்தும் நாட்டிய உருப்படிகளுள் ஒன்று

அ. ஜதீஸ்வரம் ஆ. பதம்

இ. வர்ணம் ஈ. தில்லானா

12. பாத்திரப் பிராணன்கள்

அ. இரு வகைப்படும் ஆ. மூன்று வகைப்படும்

இ. ஐந்து வகைப்படும் ஈ. ஆறு வகைப்படும்

13. தேவஹஸ்தங்களில் மயிலை வாகனமாகக் கொண்டவர்

அ. குபேரன் ஆ. இந்திரன்

இ. முருகன் ஈ. யமன்

14. தலைமயிரைக் கோதுதல், உதட்டை நாவினால் தடவுதல் போன்றவை

அ. நாட்டியதர்மி ஆ. சாத்விகபாவம்

இ. லோகதர்மி ஈ. அபாத்திர லக்ஷணம்

15. அவதாரங்களை எடுத்த கடவுள்

அ. சிவன் ஆ. பிரம்மா

இ. விஷ்ணு ஈ. முருகன்

16. கிண்கிணியின் ஆதி தெய்வம்

அ. சிவன் ஆ. தாராகணம்

இ. பிள்ளையார் ஈ. விஷ்ணு

17. பாத்திர அந்தர்பிராணன்

அ. 7 வகைப்படும் ஆ. 10 வகைப்படும்

இ. 5 வகைப்படும் ஈ. 8 வகைப்படும்

18. பரசுராம அவதாரத்துக்குரிய முத்திரைகள்

அ. கபித்தம், சிகரம் ஆ. அர்தபதாகம், அர்தசந்திரன்

இ. திரிபதாகம், சிம்ஹமுகம் ஈ. பதாகம், திரிபதாகம்

19. பரதநாட்டியக் கலையின் ஆரம்பநிலை

அ. மண்டலம் ஆ. ஆலீடம்

இ. ப்ரேங்கணம் ஈ. சுவஸ்திகம்

20. வர்ணத்தின் இருபெரும் பிரிவுகள்

அ. பூர்வாங்கம், உத்தராங்கம் ஆ. பல்லவி, அனுபல்லவி

இ. பகிப்பிராணன், அந்தர்பிராணன் ஈ. மேற்கூறிய யாவும் பிழை

21. சிவனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் தஸாவதாரஹஸ்தம்

அ. பலராம அவதாரம் ஆ. நரசிம்ம அவதாரம்

இ. வாமண அவதாரம் ஈ. கல்கி அவதாரம்

22. சம்பிரதாய பரதநாட்டியக் கச்சேரியில் முதன்முதலில் அபிநயத்தை எடுத்துக்கொள்ளும் உருப்படி

அ. ஜதீஸ்வரம் ஆ. சப்தம்

இ. தில்லானா ஈ. பதம்

23. “தட்டுமெட்டு” அடவிற்குப் பிரயோகிக்கும் மண்டலபேதம்

அ. ஆலிடம் ஆ. பிரேங்கணம்

இ. ஸ்தானகம் ஈ. ஆயதம்

24. தொழில்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட ஹஸ்தம்

அ. பாந்தவ்யஹஸ்தம் ஆ. நவக்கிரஹஹஸ்தம்

இ. ஜாதிஹஸ்தம் ஈ. தேவஹஸ்தம்

25. இன்று வழக்கத்திலிருக்கும் நாட்டிய மரபினை ஒழுங்குபடுத்தியவர்

அ. பொன்னையா ஆ. சின்னையா

இ. வடிவேலு ஈ. சிவானந்தம்

**26.** அங்கம், உபாங்கம், பிரதியாங்கம் இவை

அ. திரியாங்கங்கள் ஆ. பகிப்பிராணன்

இ. பிரேங்கணம் ஈ. அந்தர்பிராணன்

27. கர்தரிமுகம், சிகரம் முத்திரைகளைக் கொண்டு அபிநயிக்கும் உறவுமுறை

அ. கணவன், மனைவி ஆ. மைத்துனன்

இ. நாத்தனார் ஈ. சக்களத்தி

28. கச்சேரியில் மெய்யடவுகளைச் செய்யும் முதல் நாட்டிய உருப்படி

அ. ஜதீஸ்வரம் ஆ. தில்லானா

இ. வர்ணம் ஈ. கீர்த்தனம்

29. "தெய்தெய் திதிதெய்" இவ்வடவு எடுத்துக் கொள்ளும் பாதபேதம்

அ. லுடிதம் ஆ. லோலிதம்

இ. மோடிதம் ஈ. குட்டணம்

30. "நாத்ரு ததீம் தொம்ருத தீம்" இவ்வகையான சொற்கட்டைக் கொண்ட உருப்படி

அ. அலாரிப்பு ஆ. ஜதீஸ்வரம்

இ. சப்தம் ஈ. தில்லானா

(30×1=30 புள்ளிகள்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2019

பாடம்: பரதம் (நடனம்) தரம்: நான்கு

## பகுதி இரண்டு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

**முதலாவது வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. பதத்தின் இலட்சணத்தை எழுதுக.

ஆ. நீர் கற்ற தில்லானாவின் இராகம், தாளம் எழுதுக.

இ. நீர் கற்ற தில்லானாவின் பல்லவியில் வரும் 2ஆவது கோர்வையினை தாள அங்கக் (அடையாளத்துடன்) குறியீட்டுடன் எழுதுக. (18 புள்ளிகள்)

2. அ. பாதபேதம் என்றால் என்ன?

ஆ. அவற்றின் நான்கு முக்கிய பிரிவுகளின் பெயர்களைத் தருக.

இ. சாரி பேதத்தின் வகைகளை எழுதி, செய்முறையுடன் விளக்குக. (13 புள்ளிகள்)

3. அ. பாந்தவ்ய ஹஸ்தம் என்றால் என்ன?

ஆ. அவற்றைச் செய்முறையுடன் எழுதுக. (13 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றின் இலக்ஷணத்தை தருக.

அ. பாத்திரப் அந்தப்பிராணன் (3 புள்ளி)

ஆ. கிண்கிணி இலக்ஷணம் (3 புள்ளி)

இ. பாத்திர இலக்ஷணம் (4 புள்ளி)

ஈ. சபை இலக்ஷணம் (3 புள்ளி)

5. அ. திரியாங்கங்கள் எவை?

ஆ. அவற்றை விளக்கி எழுதுக.

(13 புள்ளிகள்)

(ம.ப.பா)

6. அ. பரதநாட்டிய மார்க்க உருப்படிகளை ஒழுங்குமுறையாக எழுதுக.

ஆ. பின்வரும் நாட்டிய உருப்படிகளின் இயல்புகளைத் தருக.

1. சப்தம் 2. தில்லானா 3. கீர்த்தனம் (13 புள்ளிகள்)

7. அடையார் கே. லக்ஷ்மணன் அவர்கள் நடனக்கலைக்கு ஆற்றிய பணியை விளக்கி எழுதுக. (13 புள்ளிகள்)